1991 செப்டம்பர் 23]

பட்டு ஒப்புதலுக்காக அங்கே அனுப்பப்பட்டிருக்கிறது. இதிலிருந்தே புரட்சித் தலைவி அரசு எவ்வளவு தூரம் வேகமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்கு அறிவார்கள். ஆகவே உடனடியாக முயற்சிகள் இதில் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜெ. பரந்தாமன்

டாக்டர் ஜெ. பரந்தாமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புற வழிச் சாலைகள் அமைக்கும் போது, குறிப்பிட்ட காலத்திற்கு அவை நிறைவேற்றப்பட வேண்டுமென்ற காலக் கெடு ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக புறவழிச்சாலை என்று மட்டும் அல்ல, எந்த வேலையை அரசு எடுத்துக் கொண்டாலும் அதற்கு என்று ஒரு கால நிர்ணயத்தை வைத்துக் கொண்டுதான் அந்த வேலையைச் செய்கிறோம். ஆகவே எந்த வேலைக்கும் கால நிர்ணயம் என்பது ஏற்கனவே இருக்கிற நடைமுறை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 67. டாக்டர் அ. ஸ்ரீதரன். மாண்புமிகு வனம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்.

67

இறால் மீன் வளர்த்தல்.

*1375 டாக்டர் அ. ஸ்ரீதரன் :

மாண்புமிகு வனம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஆழியார் அணைக்கட்டு அருகில் மீன் வளர்ச்சிக் கழகம் மூலம் இறால் மீன் வளர்க்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே,

ஆழியார் நீர்த்தேக்கம் மற்றும் அருகில் உள்ள நிலத்து அடி நீர் அமிலத்தன்மை சற்றுக் கூடுதலாக உள்ளதால், அங்கு நந்நீர் இறால் வளர்ப்பு அமைப்பது இலாபகரமாக இராது என தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தினரால் கருதப்படுகிறது.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தியக்கூறுகள் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் தற்சமயம் ஆழியாறு மீன் வளர்ப்பு மையத்தில் மீன் வளர்ப்பதில் சில குறைபாடுகள் இருப்பதையும், மீன் விற்பனையில் சில முறைகேடுகள் இருப்பதையும் அரசு அறியுமா? அவற்றை அரசு பரிசீலித்து நல்ல முறையில் இயங்க ஏற்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி உறுப்பினர் அவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-00

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறையில் மலையிலிருந்து வருகின்ற அருவிகளின் ஓரத்தில் ஸ்டெப் பை ஸ்டெப்-ஆக மீன் தொட்டிகளைக் கட்டி அதன் மூலம் மீன் குஞ்சு முதல் பெரிய மீன்கள் வரை பலவகையான மீன்களை வளர்த்து, மீன் காட்சியகம் அமைத்தால் மீன்களை விற்பனை செய்யலாம்; அதோடு மட்டுமல்லாமல் மீன் காட்சியகத்தைப் பார்வையிட அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருவார்கள். எனவே, இந்தத் திட்டத்தை அரசு ஏற்படுத்தி அனைத்து உதவிகளையும் செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் இதற்கான விடை தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சோ. பால கிருஷ்ணன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம்,.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது ஆழியாறு அணைக் கட்டு பற்றியது.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : இரால் மீன் பற்றியதுதான். இராமநாதபுரம் மாவட்டத்தில் இரால் மீன் வளர்ப்பு என்பது மிக முக்கியமான ஒரு தொழிலாகக் கருதப்படுகிறது. மாண்பு

1991 செப்டம்பர் 23]

மிகு அமைச்சர் அவர்கள் இராமநாதபுரம் மாவட்டத்தினுடைய கடற்கரைப் பகுதியில் இரால் மீன் வளர்ப்பதற்கான என்னென்ன திட்டங்கள் வைத்து இருக்கிறார்கள் என்பதை இந்த அவையில் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதற்கான தனிக் கேள்வி போட்டால் அரசு பதில் அளிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆரோக்கியசாமி.

டாக்டர் ச. ஆரோக்கியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய திருச்சி மாவட்டத்தில் காவிரி......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, இல்லை. துணை வினா அந்த மாதிரி வராது.

குறுகிய கால வினா எண். 1. திரு. எஸ். டேனியல்ராஜ். மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

சிதம்பரனார் மாவட்டத்திற்கு நீதிமன்றங்கள்

கு.கா. 1 —

* 3561 திரு. எஸ். டேனியல்ராஜ் :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

புதியதாக அமைக்கப்பட்டுள்ள சிதம்பரனார் மாவட்டம், தூத்துக்குடியில் மாவட்ட சிவில், கிரிமினல் நீதிமன்றங்கள் எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருநெல்வேலியில் தற்போது செயல்பட்டு வருகின்ற கூடுதல் மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றத்தை தூத்துக்குடிக்கு மாற்றி சிதம்பரனார் மாவட்டத்திற்காக மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றம் ஒன்றை அமைக்க 1991-ஆம் ஆண்டு சனவரித் திங்கள், 18-ம் நாள் அரசு ஆணை வெளியிட்டுள்ளது. தலைமைக் குற்றவியல் நீதிமன்றம் ஒன்றை தூத்துக்குடியில் அமைக்கும் நேர்வு உயர்நீதிமன்றத்துடன் கடிதப் போக்குவரத்திலுள்ளது.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரனார் மாவட்டம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் உருவாக்கப்பட்ட பின்பு 19—9—1986